## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No. 277 / 2020**

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமூண்டிஸ்வரி | தொழில் | கூலி |
| தந்தை பெயர் | : பழனி | சமயம் | : |
| கிராமம் | : கூடுவாம்பூண்டி | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 30 |

தேதி 10.03.2023

சாட்சியையும் எதிரியும் வளத்தி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. மணிகண்டன் Gr.1 - 741 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் கூடுவாம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். . இவ்வழக்கில் இறந்தபோன குப்பன் எனது தந்தை.

2. கடந்த 22.09.2018 ம் தேதியன்று விபத்து நடந்தது. அன்றைய தினம் மெயின்ரோட்டில் உள்ள எனது வீட்டில் இருந்தேன். அப்போது என்னை பார்க்க எனது அப்பா இரவு 7.30 மணிக்கு வந்துகொண்டியிருந்தார். கூடுவாம்பூண்டி மெயின் ரோட்டில் என் வீட்டின் எதிரில் கார் விபத்து ஏற்படுத்தி அங்கே என் தந்தை இறந்துவிட்டார். நான் ஓடிச்சென்று பார்த்தபோது கால் அடிப்பட்டும், முதுகு தலை, அடிப்பட்டும் இறந்துகிடந்தார். அந்த கார் வெள்ளை கலரில் இருந்தது. அந்த காரை காவல் நிலையத்தில் பார்த்தேன். கார் ஓட்டிவரை கேட்டு விசாரித்ததில் வயதானவர் என்று சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.
**( 23.09.2018 தேதியிட்ட புகார் மனு அ.சா.,ஆ-1 ஆக குறியீடுசெய்யப்பகிறது).**

**குறுக்குவிசாரணை:**

**3.** விபத்து நடந்த சத்தம் கேட்டு தான் வந்து பார்த்தேன் என்றால் ஆமாம். அ.சா.ஆ. 1. புகாரை நான் எழுதினேனா என்றால் நான் எழுதவில்லை. ஊர்க்காரரர் யாரோ எழுதினார்கள். ஆஜர் எதிரியை நான் சம்பவ இடத்தில் பார்த்தேனா என்றால்

ஞாபகம் இல்லை . அப்பா இறந்ததில் பார்க்கவில்லை.

4. விபத்து போய் பார்த்தபோது ஆஜர் எதிரி அங்கு இல்லை என்றால் நான் கவனிக்கவில்லை. விபத்தை நான் பார்க்கவில்லை ஊரில் உள்ளவர்கள் சொன்னதை வைத்து நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கார் விபத்தில் என் அப்பா இறந்ததைதான் புகார் கொடுத்தேன்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.